# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தம்)

***1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரால் 2013, திசெம்பர் மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, திசெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***281 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007864 -650 (2013/12)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது பேரவையின் உறுப்பினர்களின் அமைப்பை மாற்றுவதற்கானதாகும்.*

**தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம்**
**(திருத்தம்)**

*ச.வ-ஓ. 36/2012*

### 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் ; அதாவது -

(i) 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத் தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ii) இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழிற் பணி மனைகள் சம்மேளனத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவர் ;

(iii) இலங்கைத் தேசிய வர்த்தகப் பணிமனையின் தலைவர் அல்லது துணைத்தலைவர் ;

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட பட்டப்பின்படிப்பு முகாமை நிறுவகத்தின் பணிப்பாளர் ;

2-PL 007864 -225 (2013/11)

(v) தொழினுட்ப, தொழிற்சார் கல்வி மற்றும் பயிற்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட அலுவலர் ;

(vi) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் பெயர் குறித்துநியமிக்கப்பட்ட அத்தகைய வங்கியின் சிரேட்ட அலுவலரொருவர் ;

(vii) நிதி மற்றும் திட்டமிடுதல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட சிரேட்ட அலுவலர் ; அத்துடன்

(viii) 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்றலுவலர் அல்லது அத்தகைய பிரதான நிறைவேற்றலு வலரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட அலுவலர்.

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய பின்வரும் உறுப்பினர்கள் :-

(i) தொழில் முகாமையில் ஆகக்குறைந்தது பத்தாண்டு அனுபவத்தைக் கொண்டிருக்கும் ஆட்களாகவுள்ளவர்களும் முகாமைத்துறையில் திறமையெய்தியுள்ளவர்களுமான உறுப்பினர் கள் இருவர் ; அத்துடன்

(ii) கைத்தொழில் உறவுகள் மற்றும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஆகக்குறைந்தது பத்தாண்டு அனுபவத்தைக் கொண்ட ஆளொருவராகவுள்ள உறுப்பினர் ஒருவர்.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்